
மோதிரம்



முகுமதி

56
63

பலிபீடம் நோக்கி

R. M. Krittenaswaamy
Agent: Life Insurance Corporation of India
489. B Chairman V. Ramalinga Mudaliar Road.
SALEM



ஆசிரியர்:
மு. கருணாநிதி

எரிமலைப் பதிப்பகம்
துறையூர் ★ திருச்சி Dt.

எரிமலைப் பதிப்பக வெளியீடு 3.
முதல் பதிப்பு ஏப்ரல் 1947
விலை அணா ஆறு.

புத்தகத்தைப் பற்றி

'எரிமலை'யின் மூன்றுவது பொறியாகப் பிறக்கிறது 'பலிபீடம் நோக்கி.' புரட்சிகரமான சிந்தனையும் புதுமையான போக்கும் மிளிர்கின்றன இந் நூலிலே. கருத்திலும் சொல்கின்ற முறையிலும் புதுமையைக் கையாண்டிருக்கிறார் இதன் ஆசிரியர்.

தோழர் மு. கருணாநிதியின் பெயரை தமிழுலகம் நன்கறியும். நாடகாசிரியர். புதுயுகம் காண விரும்பும் இளைஞர். தீவிரமான கருத்துக்களை இதயத்திலே படும்படி எடுத்துச் சொல்லும் திறமை பெற்ற எழுத்தாளர். அவரது திறமைக்கு அருமையான சான்று இந்த நூல்.

குள்ளநரிச் செயல்களுக்குக் கும்பிடு போடும் உலுத்தர் கும்பல் பேனுப் பிடிக்கும் போது, தமிழுக்கும் தமிழகத்துக்கும் வீழ்ச்சி வகுத்த வெங்கண்ணக்களை ராஜதந்திரி, மேதை நிபுணன் என்று உயர்த்தி வைத்து வந்துள்ளது. உண்மையை ஒளிப்படம் போல், அழகாகக் காட்டுகிறார் தோழர் கருணாநிதி இந் நூலிலே.

பதிப்பகத்தார்.

ஊழியன் பிரஸ், துறையூர்.
Q. H. No. Ty. 40. C. 2000

பனிபிடம் நோக்கி

இமயத்தின் பனிப்பாறைகள், சேரன் செங் குட்டுவனின் வீரம் தீட்டிய ஏடுகள். கனக விசயரின் வளைந்த கழுத்துக்கள், அவன் வரலாற்றை விளக் கும் 'கார்டூன்' ஓவியங்கள். ஆர்யாவர்த்தத்தில் உருண்ட தலைகள், அவன் படை வலியைப் பாராட் டிய விமர்சன எழுத்துக்கள். தமிழகத்தில் எழுந்த கண்ணகியின் சிலை, அவன் கலையார்வத்தின் சின்னம்.

வாளேந்தி, தமிழகத்தில் புகழேந்தி வாழ்ந்த வேங்கைப் புலி சேரன் செங்குட்டுவன், தம்பி அமைத்துத் தந்த தமிழச்சியின் கலைக்கு சிலை அமைத் தவன். அரசியல் துறையில் ஆரியத்தை எதிர்த்து, அதன் கொழுப்பேறிய இருதயத்தைத் துவைத்துப் பிழிந்த கோமான்.

அந்த வீராதி வீரன் வீழ்ந்தான்.

சிங்கத்தை சுண்டெலி வெற்றி கண்டது போல- வேங்கையை வெள்ளாடு வீழ்த்தியது போல – வாளின் கூர்மை வைக்கோல் வீச்சால் மழுங்கியது போல ஆரியத்திடம் அவன் அடிமைப்பட்டான். மறவேங் தன் மண்புழு போல் நெளிந்தான். மண்டியிட்டான்.

எந்த ஆரியத்தை அரசியல் துறையில் எதிர்த்து தமிழ் நாட்டுக் கற்பின் சார்பில் வென்று, போர்க் கைதியாகப் பிடித்தானே, அதே ஆரியத்திற்குத் தெண்டனிட்டான். அஞ்சலி செய்தான். அருள் வேண்டி நின்றான்.

மறக்குல வேந்தனை சாய்த்தவன் ஒரு மறக்குல மழவனல்ல! சேரனை சாய்த்தவன் அவன் இனத்தவன் பாண்டியனல்ல ! அந்த சூரனை சாய்த்தவன் சோழனுமல்ல !

சோறும், சூதுமன்றி எதுவுமறியா ஒரு சோதா, சேரன் செங்குட்டுவனை வீழ்த்தினன். வீரத்தை விலை கேட்கும் ஒரு 'விருதா' சேரன் செங்குட்டுவனை வீழ்த்தினன்.

வீழ்த்திய முறை பெருமைக்குரியதா ? இல்லை ! போர் முனையிலா? இல்லை ! போகசாலையை மட்டும் காட்டியா? இல்லை!

யாகசாலையில்!... வீழ்ந்தான்!... வீழ்ந்தான்! ... வீழ்ந்தது தமிழன் மறம் ! வீழ்ந்தது தமிழன் கொற்றம்!

குதிரைகளின் குளம்படிச் சத்தம் கேட்கவில்லை. வேழப் படையின் வெற்றி முரசமில்லை. காலாட் படையின் கடுமையான தாக்குதலில்லை. ஊரும் தேருமில்லை. இவை ஒன்றுமே இல்லாமல் சேரன் கோட்டையில் ஆரியம் நுழைந்தது. படைத் தலைவன் மாடலவனறையன். ஆம், அந்தக் காலத்து "மஹா கனம்!". அரசியல் துறையில் வெற்றி கண்ட ஆண்மையாளனைப் பழி தீர்த்துக்கொள்ளப் பலி பீடம் அமைத்தான் அவன்!

அந்த பலி பீடம் நோக்கி சேரனை இழுத்துச் சென்றனர்.

ஆரியத்தின் அஸ்திரங்கள் சேரனின் அங்கங்களை அறுத்திருக்கலாகாதா? சிந்திய ரத்த அணுக்

களிலிருந்து சிங்கத் தமிழர் படை ஒன்று தோன்றி யிருக்குமே! .. அவன் நெஞ்சை சப் பிளந்திருக்கக் கூடாதா? அந்த வெடிப்பில் ஒரு புது சமுதாயம் முளைத்திருக்குமே!... அது ஆரியத்தின் கருவை அப் பொழுதே அறுத்திருக்குமே ? ...

அந்த அஸ்திரங்கள் செங்குட்டுவனின் மானத்தையல்லவா துளைத்து மகிழ்ந்தன. யாக நெருப் பில் அவனே பாய்ந்து 'ஆண்டவனு'க்குத் தன்னை அர்ப்பணித்திருக்கலாகாதா? தமிழனின் தனிப் பண்பு, தன்மானம்! .. அதை யல்லவா தணலில் வேக வைத்தான்.

கனகவிசயர் தலையில் கல் !

மாடலவறையன் தலையில் பணமூட்டை !

அது அரசியல் ! இது மத இயல் ! ஆரியம் ஆனந்த நர்த்தனம் செய்தது. பலிபீடத்தில் தமிழ ரைத் தள்ளுவதற்குப் பல வழிகள் அமைத்தது ! ... எங்கும் வரவேற்பு பலகைகள்... ஆரியத்தின் அன்பு(?) அழைப்புகள்.

'சொர்க்கம் செல்லும் மார்க்கம்,' 'தேவலோகத் திற்குப் பாதை,' 'வைகுண்ட வழி...' எல்லாக் கைகாட்டிகளும்... பாதைகளைப் பிரித்துக் காட்டி, கடைசியில் 'பலி பீடம் நோக்கி' தமிழரை இழுத்துச் சென்றன.

இந்த ஆட்டு மந்தைகளும் சேரன் சென்ற திக் கில் பயணம் வைத்தன. ஆரிய பலிபீடத்திற்கு அணி வகுத்தன, அணிவகுப்பில் எத்தனை அரசர்கள்... எத்தனை ஆண்மையாளர்கள்...? அய்யகோ...! எந் நாட்டுத் தோழரீர்!... அங்கே பெருகி ஓடும் உதிர

ஆறுகளைப் பாருங்கள். நீங்களும் பலிபீடம் நோக்குங்கள்.

வீழ்ந்துபோக அல்ல!... வாழ்ந்து வர! பலிபீடம் நோக்கிகளே !... இதோ மாடலவறையன் மரபிலே ஒருவர்!...

வேதியர் வெங்கண்ணு! திரைப்படமாக உருப்பெற்றிருக்கிறார்... படக்காட்சி ஆரம்பமாகிறது பாருங்கள். படம் உங்களுக்கு ஒரு பாடம் தரட்டும்.

திரையில் ஒரு எரிமலை குமுறுகிறது. 'குபீர் குபீர்' என்று நெருப்புக் குழம்பை வாரி வீசுகிறது. அந்த நெருப்பு அபிஷேகத்திற்கு ஆளாகி இடிந்து சரியும் ஆலயங்களின் கோபுரங்கள், மடாலய மதிற் சுவர்கள், பண்ணைக்காரரின் களஞ்சியங்கள் அனந்தம்... அனந்தம்! பயங்கரப் பின்னணி சங்கீதம் 'கட கடா... குடு குடு ..' என்ற அகோர இரைச்சல்.

எரிமலையைச் சுவராகக்கொண்டு பல எழுத்துக்கள் உருள்கின்றன.

★

ராயசம் வெங்கண்ணு

தஞ்சை சரித்திரக் கதை

எரிமலை 'ரிலீஸ்'

டைரக்ஷன், திரைக்கதை அமைப்பு, வசனம்:

மு. கருணாநிதி (நான்)

விநியோக உரிமை

து. வீ. நாராயணன் அன் கோ.

எரிமலையின் அனல் மூச்சு நின்று விடுகிறது. பின்னணி இசையில் இனிமை இழைகிறது. வானளாவிய பிரகதீஸ்வரன் ஆலயத்தின் கோபுரம் காட்டப்படுகிறது. தொடர்ந்து மாடமாளிகைகள், கூட கோபுரங்கள், தஞ்சையின் வீதிகள் சுற்றிச் சுழல்கின்றன. பின்னணி நின்றுவிடுகிறது.

வீதியில் ஒரு பல்லக்கு!... அதைத் தூக்கியிருக்கும் மனிதர்களின் தோள்வலியை முகத்தில் படர்ந்துள்ள சோக ரேகைகள் சொல்லுகின்றன.

'வைணவ மகான் குமார தாத்தாச்சார்யாவுக்கு' ...ஒரு பட்டை நாமக்காரன் கத்துகிறான். தொடர்ந்து 'ஜே கோஷம்'! தெரு அதிர்கிறது.

பல்லக்கு போய்க்கொண்டே இருக்கிறது. கோட்டை வாசலில் பல்லக்கு நுழைகிறது. காட்சி மாறுகிறது.

தர்பார் மண்டபம். மந்திரி பிரதானியர் வீற்றிருக்கின்றனர்.

'வீராதி வீரர் விசயராகவ மன்னன் வாழ்க!' என்ற வாழ்த்தொலியோடு தர்பார் ஆரம்பமாகிறது. சிம்மாசனத்தில் ஒரு கிழவேந்தன் அமர்ந்திருக்கிறான்.

'இளவரசர் மன்னரு நாயக்கர் வருகிறார்' ஒரு காவலன் வாய்மூடுகிறான்.

இளமையும், எழிலுந் ததும்ப மன்னரு நாயக்கன் ஆசனத்தில் உட்காருகிறான். டக்டக்' என்ற சப்தம் கேட்கிறது. சப்தம் வந்த திக்கில் எல்லோரும் திரும்புகிறார்கள். பாதரக்ஷை தெரிகிறது. பிறகு கால் பிறகு பஞ்சகச்சம். பிறகு பட்டை நாமம், பல்லக்கில் பவனி வந்த குமார தாத்தாச்சார்யா ஓய்யாரமாக நடந்து வருகிறார். விசயராகவ நாயக்கர், மன்னரு மற்றுமெல்லோரும் எழுந்து வணங்குகிறார்கள். குருவுக்கு பாத பூஜை நடக்கிறது. குரு பேசுகிறார்.

'விசயராகவா! என்னை அழைத்த விஷயம் என்ன?'

விசயராகவர்: குருஸ்வாமி.. மதுரை சொக்கநாத நாயக்கன் நமது மன்னருவின் மகளை மணந்து கொள்ள விரும்புகிறான்.

குரு: மணவிஷயமா?...மங்களமாக நடக்கட்டும்.

விசய: மங்களத்திற்கு வழியில்லை.

குரு: விசயராகவா?'...என்ன சொல்கிறாய்?

விசய: மதுரை மன்னன்...விஜயநகரின் சேவகரபில் வந்தவன். அவனுக்கு என் பேத்தியை அளிப்பது பேதமை. பெரும் இழிவு!...ஆகவே மறுத்துவிட்டேன்.

குரு: கோத்திரமறிந்து பெண்ணைக் கொடுக்க வேண்டும் ..சந்தோஷம் !

[மன்னரு நாயக்கன் குறுக்கிட்டு]

'சந்தோஷத்திற்கும் வழியில்லை சாமி !...சமர்க்களத்தில் சந்திப்பதாக மதுரை வேந்தன் அறிவித்து விட்டான்.'

குரு: சமாதானத்திற்கு வழியில்லையா ?

மன்னரு: சமாதானம்!...என் மகளை அவனுக்குக் கன்னிகாதானம் செய்தால் சமாதானம் ! ..இல்லையேல் போர்க்களத்தில் பெருக்கெடுக்கும் ரத்தவெள்ளத்தில் தான் சமாதானம் முளைக்கும்.

குரு: போருக்குத் துணிந்துவிட்டீர்களா ?... ...

மன்னரு: ஆம்! தோளில் பலமுள்ள வரையில் போராட்டம். மார்பில் வேல்தாங்கி மாண்டுபோகத் தீர்மானம், மகளை அந்த மதான்மத்தனுக்குக் கொடுத்து மானமிழப்பதில்லை யென்ற முடிவு.

குரு: சரியான முடிவு செய்யுங்கள்.

[விசயராகவ மன்னன் எழுந்து]

'ஸ்வாமி...மதுரை, மகத்தான வலிவோடு தஞ்சையில் பாயத் திட்டமிட்டிருக்கிறது. நம் படை மிகச் சிறிது. போரில் வெற்றிகாண வேண்டுமானால்... உங்கள் வாழ்த்து தேவை. அருளுங்கள்.'

மன்னன் மண்டியிட்டு வணங்குகிறான். சபையில் ஒரே நிசப்தம். தாத்தாச்சார்யா பேச ஆரம்பிக்கிறார்:

'விசயராகவா ! நீயும் நின் குலமும் வாழ்க! திருப்பாற் கடல் துயிலும் திருமாலின் திருவருளால்

நின் திருமுடி வாழ்க! நின் தரணியில் அமைதி நிலவுக! நின் புகழ் பரவுக! நின் ஆயுள் வளர்க! நின் ஆட்சி நீள்க!...போரில் ஜெயம் உனக்கே!'

வாழ்த்து முடிகிறது. 'கல கல' என்ற ஒலி கேட்கிறது. ஆச்சார்யாவின் பாதத்தில் பவுன் நாணயங்கள் கொட்டப்படும் காட்சி! திரையில் ஒரு மின்னல். மீண்டும் பயங்கரமான இசை!..... மூரசு முழங்குகிறது. ஓரே தூசிப்படலம். குதிரைகளின் ஓட்டம். 'ஆ ஊ' என்ற கூச்சல்கள் எழுகின்றன.

பீரங்கி வேட்டுகள் இடியென முழங்குகின்றன. கால்வாய்களில் சிகப்புத்தண்ணீர் ஓடுகின்றது.

மார்பில் காயம் பட்டவரும், விலாவில் வேல் பட்டவரும், தலையில் ஈட்டிபாய்ந்தவருமாக.....சட சடவென்று வீரர்கள் முறிந்து விழுகின்றனர். ஒரு வீரனின் கண்ணில் குண்டு துளைத்து பிடரிப்பக்கம் ஊடுறுவுகிறது. பரிதாபமான காட்சி!

போர்முனையில் மற்றொருபக்கம்.

விசயராகவன், அவன் தேவி, மன்னரு, அவன் மகள் ஆயுதபாணிகளாய் காட்சிதருகின்றனர். விசயராகவன் கேட்கிறான்.

'அந்தப்புர மாதர்கள் எங்கே?'

மன்னரு: எதிரிகள் உள்ளே நுழைந்தால், அவர்கள் தற்கொலை செய்துகொள்ள தீ, வளர்க்கிறார்கள்

[விசயராகன் ஆசையோடு]

'மன்னரு'..... உன் குழந்தை செங்கமலதாசன் பத்திரமாக இருக்கிறானே?'

மன்னரு: தாயிடம் இருக்கிரூன். பயம் வேண் டியதில்லை.

இந்தப் பேச்சு முடிவதற்குள் பேரிடி போன்ற சப்தங்கள் கிளம்புகின்றன. கோட்டைச்சுவர்கள் சரிகின்றன. கல்லும் மண்ணும் காற்றில் பறக் கின்றன. ஒரே அக்கினி வீச்சு!.....

மன்னரு நாயக்கன் மார்பில் ஒரு ஈட்டி பாய் கிறது. ஈட்டி எறிந்தவனை அவன் மகள் வெட்டி வீழ்த்தி இன்னொரு ஈட்டிக்கு இரையாகிரூள். மன்னருவின் பயங்கர மரணம். சோகம் எதிரொலிக் கிறது.

விசயராகவனையும் அவன் தேவியையும் கைது செய்ய மதுரைத் தளபதி நெருங்கிவருகிரூன். விசய ராகவன் ஈட்டியை மேலே எறிந்து, அதை மார் பில் தாங்குகிரூன். கீழே சாய்கிரூன், மகாராணி யும் அவ்வாறே மரணத்தை முத்தமிட்டு மன்னன் மார்பில் விழுகிரூள். எதிரிகள் பக்கம் வெற்றி யொலி கடலலை போல் முழங்குகிறது.

குற்றுயிராகக் கிடக்கும் விசயராகவ வேந்தனை 'குளோசப்'பில் காண்கிறோம். அவன் வாய் முணு முணுக்கிறது.

'ஸ்ரீரங்கத்தை தெரிசிக்க, தஞ்சையில் ஆகாய மளாவக் கோபுரம், நாள்தோறும் பன்னீராயிரம் பிராமணருக்கு சந்தர்ப்பணை. மன்னர்குடி ராஜ கோபால ஸ்வாமிக்கு நவரத்ன கவசம், வைரமுடி. ஆலயப்பிரகாரங்கள், நந்தவனம், குளம், ரகுநாத அக்கிரகாரம், இவ்வளவு கைங்கர்யமும் செய்தேன். இன்று எதிரிகள் என் நாட்டில் நுழைவதைக்

கண்டு துடிக்கிறேன். என் தான தர்மங்கள் தெய்வ பக்திகள் வீண் தானு? தாத்தாச்சார்யாவின் வாழ்த்து தண்ணீரில் விழுந்த சாம்பல் போல் கரைந்துவிட்டதே!... கடவுள்களுக்கு அழித்த பொக்கிஷத்தை என் படைப்பெருக்கத்திற்கு செல்விட்டிருந்தால் இக்கதி வந்திராதே!.....'

விசயராகவன் கண்ணை மூடுகிறான், மார்பில் ரத்தம் மலைவீழ் அருவியென வழிகிறது. கோட்டை வாயிலில் மூச்சற்றுப்படுத்திருக்கும் வீர உருவங்களை வரிசையாகப் பார்க்கிறேரும். காட்சி மாறுகிறது. அரண்மனையின் உட்புறம்! தீக்குண்டம் எரிநாக்குகளால் இரையைத்தேடி அலைமோதுகிறது .....ஒருவர்பின் ஒருவராக பெண்கள் தீக்குளத்தில் குதிக்கின்றனர்.

மன்னரு நாயக்கன் மனைவி, குழந்தை செங்கமலதாசனுடன் நெருப்பின் பக்கம் வருகிறாள். அவள் கண்களில் இரண்டு நீர் வீழ்ச்சிகள், கையிலிருக்கும் குழந்தையை ஒரு தோழியிடம் கொடுக்கிறாள்.

'பட்டத்துக் குரியவன். பத்திரமாகக் பாதுகாத்துக் கொள்.'

இதைச் சொல்லிக்கொண்டே அக்கினி குண்டத்தின் அருகில் வருகிறாள். குழந்தையை மறுமுறையும் பார்க்கிறாள். அவ்வளவு தான். 'சுர்' என்ற சப்தம். ஆம்... அவள் கண்ணீரைத்தான் நெருப்பு, அப்படி உறிஞ்சுகிறது. குழந்தையோடு தோழி எங்கேயோ ஓடுகிறாள்,

ஓடுகிறாள்...ஓடுகிறாள்...அப்படியே ஓடுகிறாள்.. காட்சியை இருள் சூழவுகிறது.

மீண்டும் திரையில் எழுத்துக்கள், ஓடிவந்து நிற்கின்றன. அவை.....

தஞ்சையைத் தன் வசமாக்கிக்கொண்ட மதுரை மன்னன் தன் பிரதிநிதியாக தம்பி அளகிரி என்ப வனை தஞ்சைக்கு அனுப்பினன். அரசப் பிரதிநிதி யாக வந்த அளகிரி ..ஆட்சியைக் கைப்பற்ற ஆசை கொண்டான். ஆசையைக் கிளப்பிவிட்டவன் வெங்கண்ணு என்னும் வேதியன். மதுரைக்குக் கப் பம் கட்டாமலிருந்தால் தஞ்சையை நம் வசப்படுத்திக் கொள்ளலாம் என்று வெங்கண்ணு தந்திரம் சொல் லிகொடுக்கவே அதன்படி அளகிரி நடந்துகொள் கிறான். போர்செய்து களைத்திருந்த மதுரையும் அலட் சியமாக இருந்துவிடுகிறது. அதேசமயம், அதிர்ஷ் டத்தின் மேல் அதிர்ஷ்டமாக அரண்மனையில் ஒரு புதையல் அகப்படுகிறது. அந்தப் புதையல் தான் அளகிரியின் ஆட்சிக்கு முடிவு தருகிறது.

எழுத்துக்கள் சென்றுவிடுகின்றன. அடுத்த காட்சியாக தஞ்சை அரண்மனையில் ஒரு தனி யிடத்தைப் பார்க்கிறோம். வேந்தனும் வேதியரும் சரியாசனத்தில் அமர்ந்திருக்கிறார்கள் வேதியர் சிரித்துக்கொண்டே பேச்சைத் தொடர்கிறார்.

'இந்த முறை கப்பங் கட்டியிருந்தால் சொக்க நாதனின் அடிமையாகவே இருந்திருக்க வேண்டும். எப்படி என் ராஜதந்திரம்?'

'வெங்கண்ணு வாக்கு, வேதவாக்கு. ஒருவேளை ...மதுரை நம்மீது திடீரெனப் பாய்ந்தால்?'

'புலி, களைத்திருக்கிறது. அது கொஞ்ச நாளைக்கு குகையை விட்டுக்கிளம்பாது. அதற்குள் நம்படை வரிசையை பலப்படுத்தி விடலாம்.'

'ஆஹா...வெங்கண்ணுவின் மூளையே மூளை!... விதவிதமான யோசனைகள் வெகுவேகமாக மூளைக் கின்றன.'

'இல்லாவிட்டால், பரம்பரை பரம்பரையாகப் பார்த்துவரும் ராயசத்தொழில் நிலைக்குமா? வீழ்ந்து போன விசயராகவன் கூட என் மூளைக்கு வேலை கொடுக்கத் தவறுவதில்லை. நான்மட்டு மல்ல. அந்த ணர் வம்சத்திற்கே அறிவியலிலும், அரசியலிலும் அதிக அனுபவமுண்டு.'

'அதற்கென்ன தடை...ஆண்டவன் படைப்பே அப்படியிருக்கிறது.'

'முகத்தில் பிறந்தவர்கள் அல்லவா? மூளைக்கு அருகாமையில் இருப்பது தானே முகம்.'

'சந்தேகமென்ன?...ஆமாம்'

'சாதாரண ஒரு ராஜப்பிரதிநிதியை சாம்ராஜ்ய மன்னனாக ஆக்குவதென்றால் எவ்வளவு அரிய பெரிய ஆலோசனை இருக்கவேண்டும்'

'ஆலோசனை மட்டுமா?... அளகிரியின் நலத்தில் அவ்வளவு அக்கரையும் இருக்கிறது உமக்கு. வெங் கண்ணு!...உம்முடைய உதவிக்கு நன்றி...ஏற்றுக் கொள்ள வேண்டும்.'

'வாயளவில்...வார்த்தை யளவில் அவ்வளவு தானே?'

'வெங்கண்ணு! நீர் வேண்டும் வெகுமானம் பெறலாம்.'

'அரசர் வாக்குத்தவற மாட்டாரல்லவா?'

'அகில உலகம் அசையத் தவறும் வெங்கண்ணு விஷயத்தில் அளகிரி தவறமாட்டான்.'

'சரி .. எனக்கு வேண்டிய சன்மானத்தைக் கேட்கலாமா?'

'சங்கோசமின்றிக் கேட்கலாம். சந்தோஷமாகத் தரப்படும்.'

'உழைப்புக்கேற்ற ஊதியம்! இதில் சங்கோசத்திற்கு இடமேது?'

'உமது உழைப்பால் நான் உயர்ந்தேன் உண்மை!... உழைப்பு உபயோகமான பிறகு உதறி. விடும் உன்மத்தனல்ல நான். உமக்கு வேண்டியதைக் கேளும்.'

'விபீஷணன் செய்த உதவிக்கு ஸ்ரீ ராமன்... இலங்கையையே கொடுத்துவிட்டானல்லவா?'

'ஆமாம். இப்போது...'

[அளகிரியின் முகத்தில் சில கோடுகள் சந்தேகத்தைக் கிழிக்கின்றன.]

'அதைப்போல், நானும் தேசம் கேட்பேனே என்று திகைக்க வேண்டாம்'

'நீர் கேட்கமாட்டீர்! நல்லவர்! எனக்குத் தெரியும்!'

[அளகிரி முதத்தில் அசடு வழிகிறது.]

'நீர் என்னிடம் காட்டும் பிரியத்தில், நான் எதைக் கேட்டாலும் கொடுப்பீர்! அவ்வளவு தாராள சிந்தையும் தணியாத அன்புங் கொண்டவர் நீர்'

'உம், கேளும்'

[அளகிரியின் கண்களில் ஒளி இல்லை. புருவம் வளைகிறது.]

'புதைந்து கிடந்த பொக்கிஷம்! அதைக் கண்டு பிடித்துக்கொடுத்தது, நான்தானே மகாராஜா!'

'ஆமாம்'

[அளகிரியை இப்பொழுது பார்க்க சகிக்கவில்லை. பரிதாபமாக இருக்கிறது.]

'அதைக் கொடுத்தால் போதும்'

இதைச் சொல்லிவிட்டு வெங்கண்ணு அளகிரியின் வாயை ஆவலோடு நோக்குகிறான். அளகிரி பேச ஆரம்பிக்கிறான். பேச்சில் ஆத்திரம் கொப்பளிக்கிறது. அதை அவனால் அடக்கமுடியவில்லை எப்படி அடக்கமுடியும்?

'பிராமணரே! பேராசைப்படுகிறீர். பொக்கிஷம் பொதுமக்கள் நலத்திற்காக! அதைத் தர முடியாது'

வெங்கண்ணுவுக்குக் கூட வீரம் பிறக்கிறது வெடுவெடுப்பாகப் பேசுகிறார்.

'அளகிரீ!... அகம்பாவம் தலைக்கேறிவிட்டது, அதிகார போதையில் அழிவை அணைத்துக்கொள்ளாதே. உன்னை அரசனாக்கியது நான். மதுரையின் அடிமையை மன்னனாக்கினேன். அவன் மமதை கொண்டு பேசுகிறான். பேஷ்!'

'வெங்கண்ணு!... வெத்துவேட்டுக்கள் கிளப்ப வேண்டாம். வார்த்தையில் நிதானமிருக்கட்டும்'

'நன்றி கெட்டவனே! ஆரியத்தை நீ சரியாக உணரவில்லை. அது நெருப்பு. நெருங்காதே,'

'சினத்தைக் கிளப்பாதீர். சிறைச்சாலை திறக்கப்படும்.'

'அளகிரீ! இதோ உன் ஜாதகத்தைக் கணித்து விட்டேன் உன் ஆட்சி அற்பாயுசில் அழியப்போகிறது. வெங்கண்ணு ஒரு பூகம்பம். அதில் மாட்டி மாளப்போகிறாய்.'

வெங்கண்ணு ரௌத்ரகாரமாகத் திரும்புகிறான். அளகிரியும் அசைவற்று நின்றவன் 'கட கட'வெனச் சிரிக்கிறான். அந்த சிரிப்பின் ஒலியைத் தொடர்ந்து ஒரு சித்திரம் காட்டப்படுகிறது.

சேரன் செங்குட்டுவன் மாடலவறையனுக்குமுன் சிரந்தாழ்த்தி நிற்கும் சித்திரமது. அதை உற்றுப் பார்க்கிறான் வெங்கண்ணு, ஒரு பயங்கர மின்னல், திரையில் ஒளிச்சிடுகிறது, காட்சி மாறுகிறது. கடற்கரையின் வெண்மணல். அதை முத்தமிட்டுத் திரும்பும் பேரலைகள். நீண்ட தெருக்கள். தெருக்களில் டச்சுக்காரர், போர்ச்சுகீசியர் நடந்துகொண்டிருக்கின்றனர். இப்படியே காட்சியில் பல பகுதிகள் ஓடிக்கொண்டே யிருக்கின்றன. கடைத் தெரு காட்டப்படுகிறது. குறிப்பாக ஒரு விளம்பரப் பலகை.

'நயமான சிகப்புக்கள் விற்கப்படும்
நல்லெண்ண செட்டிக்கடை
நாகை.'

காட்சி மீண்டும் உருண்டு, கடைசியில் ஒரு தெருக் கோடி தெரிகிறது. அழகான வீடு ஒன்று. அதில் வெங்கண்ணு நுழைகிறான் வீட்டின் வெளிப் புறம் மறைந்துவிடுகிறது. உள்ளே... வெங்கண்ணு ஒரு பெண்ணுடன் பேசிக்கொண்டிருக்கிறான்.

'செங்கமலதாசன் ஒரு செட்டிப் பெண்ணிடம் வளர்கிறான் என்பது மட்டும் எனக்கு முன்னமே தெரியும். அந்தப் பெண்ணரசி நீ தான் என்பது எனக்குத் தெரியாது... கடவுள்தான் உன்னைக் காட்டிவிட்டார்'

வெங்கண்ணு பேசிமுடிவதற்குள், செட்டிப் பெண்ணின் புருஷனும், ஒரு இளைஞனும் பிரவேசிக் கிறார்கள். வெங்கண்ணு ஆவலாக ஓடி அந்த வாலிப னைக் கட்டிக்கொண்டு அழுகிறான். அவன் அழுவது வெறும் பாசாங்கு என்பது அவன் முகத்தில் பிரதி பலிக்கிறது. வெங்கண்ணு சோக மொழிகள் உதிர்க்கி றான்.

'இளவரசே!... என் கண்ணே!... நீ உயிரோடு இருக்கிறாயே, அது போதும் அப்பா!... உன் தந்தை வேலுக்கு இரையானார். உன் தாய் நெருப்புக்கு இரையானாள். உன் தஞ்சைத் தரணி... தெகிடு தத் தக்காரர்களுக்கு இரையாகிவிட்டது. இனிமேலா வது நாடு செழிக்கவும், மக்கள் நலம் பெறவும், இழந்த பொன்னாட்டை ஆளுவதற்கு வா!...'

வாலிபன் விழிக்கிறான். 'அம்மா!' என்று அவள் முகத்தைப் பார்க்கிறான். அவளும் ஆனந்தக் கண்ணீர் வழிய அவனை முத்தமிடுகிறாள்.

'தம்பீ! நான் உன் அம்மா அல்ல. நீ...விசய ராகவ வேந்தரின் பேரன், மன்னரு நாயக்கரின் மகன். தஞ்சைக்கோட்டை தணலில் வேகும் போது... உன் தாத்தாவும், தந்தையும் மாண்ட செய்தி கேட்டு உன் தாய் தற்கொலை செய்து கொண்டாள். அப்போது, உன்னை என் கையில் கொடுத்து 'பட்டத்துக்குரியவன், பத்திரமாக பாது

காத்துக்கொள்' என்று கூறி உன்னை வளர்க்க இந்தப் பவுன் மூட்டையையுங் கொடுத்தாள்.'

பெட்டியிலிருந்து செட்டிப் பெண் ஒரு பவுன் மூட்டையை எடுத்து செங்கமலதாசனிடம் காட்டுகிறுள்.

செங்கமலதாசனின் தலை கம்பீரத்தால் நிமிர்கிறது. அவன் கண்களில் புதுஒளி. ஓரு வீர மூச்சு!...

'என் தந்தையர் நாடு என்னை விட்டுப் போய் விட்டதா?

இளவரசன் கேட்கிறுன் சோகமாக! அதில் கோபமும் கலந்துள்ளது, ஊமை வெயில் போல!

'உன் நாட்டை உனக்காக்கவே இந்த ஊழி யன் இளம்பியிருக்கிறேன். செங்கமலதாசா!..... உடன்புறப்படு.'

வெங்கண்ணு அழைக்கிறுர். செங்மலம் தன் வளர்ப்புப்பெற்றேரை வணங்குகிறுன். வளர்ப்புத் தந்தையின் இதழோரப் புன்னகை ஒளிகிறது.

'அந்தணர் பெருமானே!..... அரசைக் கைப் பற்றுவதென்றுல் ஆட்பெரும் படை, அணிதேர்' புரவி, அனைத்தும் வேண்டுமே. வீணுக...செல்வன் செங்கமலத்தை பலியிட்டுவிடாதீர்கள்.'

தந்தை கெஞ்சலுடன் எச்சரிக்கை முழங்குகிறுன்.

'அமோகமான சைன்யம் இருக்கிறது. அதற்கெல்லாம் ஏற்பாடு செய்துவிட்டேன். அளகிரி ஒழிவான்.'

வெங்கண்ணுவின் வெற்றிச் சிரிப்போடு காட்சி திடீரெனத்திரும்புகிறது.

பிறக்கொடி பறந்துகொண்டிருக்கிறது. கொடி நடப்பட்டிருக்கும் உயர்ந்த ஸ்தூபி! அதைப் பின்பற்றி மளவள வென்று கோட்டையின் பல பாகங்கள் நகருகின்றன. பேச்சுக்குரல் கேட்கிறது.

வெங்கண்ணு தான் பேசிக்கொண்டிருக்கிறான்.

'பீஜபூர் சுல்தான் பிரபு!... இன்னும் கேளுங்கள். மக்கள் பசியால் மாளுகிறார்கள். வறுமையால் வாடுகிறார்கள். அளகிரியின் ஆட்சி அழிந்தால் அதர்மம் அழியும். அக்ரமம் ஒழியும். அந்தணர் வாழ்வர். ஆட்சி செழிக்கும்.

இன்னுங்கேளுங்கள், பீஜபூரின் புஜபலத்தை இகழ்கிறான் அளகிரி! உங்கள்..... பரந்த படை வலிமையைப் பரிகசிக்கிறான் அற்பன்! நான் அவனைப் பலமுறை எச்சரித்தேன். எரிமலை மேல் விளையாடாதே என்றேன். மக்களுக்காக ஆட்சி நடத்து. இல்லையேல் பீஜபூர் மன்னனை அழைத்து நீதி வழங்கச்செய்வேன் என்றேன். பீஜபூர் தனக்கு ஒரு தாசி என்றான் பேதை!

சுல்தான்ஜீ! இதோ இருக்கிறான் சொந்த நாட்டுக்குரிய செங்கமலம். தாய் தந்தையற்றவன் நீங்களே அவனுக்குத்தாய் – தந்தை – கடவுள் எல்லாம்! இவன் இழந்த உரிமையை நீங்கள் தான் வாங்கி அருளவேண்டும்.''

இதுவரை மௌனமாக இருந்த சுல்தான் 'சரி...ஷாஜியின் மைந்தனை அனுப்புகிறேன்' என்று

கூறியபடி பக்கத்து ஆசனத்தைப் பார்க்கிறான். அதில் அமர்ந்திருந்த ஒரு ஆண்மையாளன் கம்பீரமாக எழுந்து நிற்கிறான்.

'வெங்காஜீ! அளகிரியின் மகுடம் சாயவேண்டும். செங்கமலம் சிம்மாசனம் ஏற வேண்டும். பெரும்படையுடன் புறப்படுக.'

சுல்தானின் ஆணையேற்று வெங்காஜியின் தலை அசைகிறது.

'வெற்றியோடு திரும்புக.'

சுல்தானின் வாழ்த்து இது!

'மராட்டியன் மார்பு ரத்தக்கரை படிந்தது வெற்றி அவனுக்கு சாதாரண விஷயம். தூர்க்கையின் அருள் இருக்கும் வரையில் தோல்வி இல்லை .....'

வெற்றி தான்! வீரமொழியோடு வெங்காஜி வாளை உறுவுகிறான். செங்கமலதாசனும் கம்பீரமாக நிமிர்கிறான்.

திரையில் ஒரு நட்சத்திரம் 'விசுவரூப'மெடுத்து விடுகிறது. 'தோல்வி இல்லை ... வெற்றி தான்!' என்ற வீர முழக்கத்தோடு கையிலிருந்த வாளை உறையில் போடுகிறான் வெங்காஜி. பேரிகை ஒலித்து, நிற்கிறது. செங்கமலதாசனுக்கு வெற்றி கிடைத்துவிட்டது என்பதின் அடையாளம் அது.

உடன் ஒரு பயங்கரமான காடு தோன்றுகிறது. உயர்ந்த மலைப்பாறைகளில் ஒரு உருவம். ஓடிக்கொண்டிருக்கிறது. உருவத்தை 'குளோஸ்அப்'பில் டார்க்கிரேம். ஆமாம் அளகிரி தான் அப்படி ஓடுகிறான்.

'பாவி...வெங்கண்ணு!' அவன் வாய் முணு முணுக்கிறது. பாறையிலிருந்து கீழே உருளுகிறான். பேச்சு மூச்சைக்காணோம்.

'டாண்! டாண்!' என்று மணியோசை கிளம்பு கிறது. தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தின் பெரிய நந்தியை தரிசித்துவிட்டு கை கூப்பியவண்ணம் வெங்கண்ணுவும் செங்கமலதாசனும் பிரகதீஸ்வரர் சன்னதியில் நுழைகின்றனர். வெற்றி முழக்கம் காது செவிடுபடுகிறது. 'ஆண்டவனுக்கு அர்ச் சனை'களேபார'ப்படுகிறது.

மணியோசையின் ஸ்தாயி குறைந்துவிடவே... அரண்மனைக் கொலுமண்டபத்தைப்பார்க்கிறோம்.

செங்கமலதாசன் பேசுகிறான்: 'தஞ்சையில் மறு மலர்ச்சி உண்டாக்கி மகுடம் புனைந்ததற்காக மராட்டிய வீரர் வெங்காஜி இந்தப் பதினாறு லட்-சம் பூவராகன்களைப் பெற வேண்டுகிறேன். அத் துடன் சேனையின் செலவுக்கு ஈடாக கும்பகோணம் பாபநாசம், பன்னிர்குடி வட்டாரங்களின் வரிப் பணத்தையும் எழுதிக்கொடுக்கிறேன்.'

வெங்காஜி: வாழ்க பன்னன்! தூர்க்கையின் அருள் சுரக்குமாக!

வாழ்க தஞ்சை!

வெங்காஜி பரிசைப் பெற்றுக்கொள்கிறான். வெங்கண்ணு முகத்தில் பரவசம் பிரகாசிக்கிறது.

திரையில் இரண்டு வாள்கள் மோதிக்கொள் கின்றன. அந்த மின்வெட்டில் அடுத்த காட்சி ஆரம்பமாகிறது. நந்தவனப்! நீர்த்தொட்டிகள்!...

பூஞ்செடிகள்!...பளிங்கு மேடை!..நாம் காண்பது காதலர்களை யல்ல!.....

செங்கமலதாசனும் வெங்கண்ணுவும் உரையாடலில் சிக்கியிருக்கிறார்கள்.

'வெங்கண்ணு! இன்னொரு சந்தோஷ சமாச்சாரம்.'

'என்ன அரசே?'

'என்னை மகன் போல் வளர்த்தவர்களை மறக்கக் கூடாதல்லவா?'

'கண்டிப்பாக மறக்கக் கூடாது. மாதா — பிதா — குரு — தெய்வம்.'

'அப்பாவையும் அம்மாவையும் தஞ்சைக்கே கூப்பிட்டுவிட்டேன்.'

'ஆமாம். அரண்மனையில் ஆனந்தமாயிருக்கட்டுமே.'

'அதோடு...அப்பா அகங் குளிரும்படி...செய்யப் போகிறேன்.'

'செய்யத்தானே வேண்டும். கடமை தான்.'

'அருமையான பரிசளிக்கப் போகிறேன்.'

'அளிக்கத்தான் வேண்டும்.'

'அப்பாவையே அமைச்சராக்க உத்தேசம்.'

'ஆ!... அபச்சாரம். வளர்த்த வாணிபச் செட்டிக்கு மந்திரிப்பதவி!... அப்படியானால் முடிசூட்டிய வெங்கண்ணுவுக்கு?'

'வெங்கண்ணு!.. நீங்கள் தான். என் குருவாயிற்றே!'

'சிறுபிள்ளை! விளையாடுகிறீர். கோவிந்த தீக்ஷிதர் போன்ற பெரியோர்கள் அமர்ந்த மந்திரி பீடத்தில் நீர் மாசு தூவுகிறீர்.'

'அவர்கள், திக்கற்ற என்னை தாலாட்டி வளர்த்தவர்கள். என் உடலின் ஒவ்வொரு பாகமும் அவர்கள் உப்பால் வளர்ந்தவை. எனக்காக அல்லும் பகலும் கஷ்டப்பட்டார்கள். என் தாயும் தந்தையும் அவர்கள் தானே!'

'இருக்கலாம். உமது தலையில் மின்னுகிற கிரீடத்தைக் கேளும். உம்மை மன்னனாக்கியது யார், என்று அது சொல்லும்.'

'நீங்கள் தான்! அதை என் உடலில் ஓடும் ஒவ்வொரு துளி ரத்தமும் சொல்லும். நன்றி மறக்க மாட்டேன்.'

'மறக்கவில்லையானால் மந்திரிப் பதவி எனக்கே வேண்டும்.'

'கேவலம் மந்திரி பீடத்தில் உள்ள மோகத்திற்காகவா என்னை மன்னனாக்கினீர்? மக்களுக்கு நல்லாட்சி வேண்டும், எனக் கதறினீரே — உமக்கு ஒரு நல்ல பதவி கிடைக்கும் என்பதற்காகத்தானா?'

'செங்கமலதாசா! குறும்பு வேண்டாம். கொதிக்கும் கொப்பரையில் குதித்துச் சாகாதே, நன்றி மறந்தாய்! நாயினுங் கீழானாய்!'

'மன்னிக்கவும். மந்திரி பதவி தருவதாக வாக்களித்துவிட்டேன்.'

'அதைமாற்றி அமைத்தாக வேண்டும்.'

'வாக்குறுதியை மீறுவது சரியா?'

'வெட்டிப் பேச்சு வேண்டாம். விறுவிறு என்று பதில் கூறு.'

'அமைச்சர் பதவி அப்பாவுக்குத்தான்! அதை மாற்ற முடியாது. தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள்.'

தலைவணங்குகிறான் தஞ்சை அரசன். தர்ப்பா சூரர் வெங்கண்ணு தடதடவென ஆத்திர மொழி களை அள்ளிக்கொட்டுகிறார்.

'அடே, நீ ஆரியத்தை உணரவில்லை. விஷத்தை நாக்கில் தடவிக்கொள்கிறாய். விபரீதத்தை ஏற்கத் தயாராயிரு. அளகிரியின் அடிச்சுவட்டைப் பின் பற்றுகிறாய். ஆபத்து வெடிக்கப்போகிறது. இனி ஆண்டவன் பொறுக்கமாட்டான்.'

வெங்கண்ணு நந்தவனத்தை விட்டே வேகமாக வெளியேறுகிறான். அவன் வேகத்தில் மோதுண்ட ஒரு மல்லிகை மொட்டு... காம்பு முறிந்து கீழே விழு வதைக் காணுகிறோம். செங்கமல தாசன் சோக நடை போடுகிறான். இழையும் பின்னணி சங்கீதத்து டன்... கும்பகோணத்தின் மகாமகக் குளம் காட்சி யாகிறது.

காமிராவின் மாயாஜாலங்களில் குடந்தையின் அழகான பகுதிகள் அகப்பட்டு அசைந்தோடுகின் றன. தெருவில் இருவர் பேசிக்கொண்டு போகிறார் கள்.

'வெங்காஜி, நம்ப ஊரில் தங்கியிருக்கிறாராமே?'

'தங்குவாரப்பா... தங்குவார். தஞ்சாவூர் ராஜா தான் கும்பகோணத்தை வெங்காஜிக்குக் கொடுத்து விட்டாரே'

தெருவின் மூலை வரையில் தான் அவர்களைப் பார்க்க முடிகிறது. பிறகு காட்சியில் ஒரு கர்ணம்!

வெங்காஜி தன் மாளிகைத் தாழ்வாரத்தில் உலவிக்கொண்டிருக்கிறான். சிந்தனைக் கீறல்கள் நெற்றியில் ஒன்றன் மேல் ஒன்றாகப் படிகின்றன. உலவிக் கொண்டிருந்தவன் நடையை நிறுத்தி வாயைத் திறக்கிறான்.

'நல்லகதை' என்று நையாண்டியாக சொல் உதிர்க்கிறான். இதுவரை வெங்காஜியை மட்டுமே கண்ட நாம் இப்பொழுது வெங்கண்ணுவையும் காணுகிறோம் பூணூலைத் தடவிக்கொண்டே பூசுரர், வெங்காஜியின் பக்கம் அடி போடுகிறார்.

'மராட்டிய குல மகிபா! தஞ்சாவூர் சிம்மாசனம் தங்களை அழைக்கிறது.'

'விளையாட்டாக இருக்கிறது.'

'ஆம். செங்கமலம் அரசியல் விளையாட்டாகத் தான் எண்ணிவிட்டான்.'

'பாவம் .. சிறுவன்! பக்குவம் வரவேண்டும்'

'ஷாஜி மைந்தரே! அவனு சிறுவன். இல்லை. விஷ வித்து!... தங்களைக் கொல்ல என்னை யோசனை கேட்கிறான்'

'அவன் பலம், அவனுக்கே தெரியும். அப்படியெல்லாம் நினைக்கமாட்டான்'

'உங்களோடு சண்டை செய்து அவன் ஜெயிக்கவா? அது இல்லை. ஆனால்...'

'என்ன ஆனால் ...?'

'வீரரே!... உங்களை நான் இப்போது விருந்துக்கு அழைக்க வந்திருக்கிறேன்'

'விருந்தா?'

'கேளுங்கள் ! அழைப்பது விருந்துக்கு. அங்கு நடப்பதும் விருந்துதான். ஆனல்... விருந்து உங்களை வீழ்த்திவிடும்.'

'காரணம்?'

'செங்கமலத்தின் சூழ்ச்சி! விருந்தில் விஷத்தைக் கலக்க ஏற்பாடு செய்திருக்கிருன்.'

'நன்றி மறந்த தியன் ! நாளைக்கே நமது படையைத் திரட்டுகிறேன். தஞ்சையை ஆளவேண்டு மென்ற என் கனவு... பலிக்கட்டும். மலையை எதிர்க்கி றது மண்மேடு...!'

'ஆம்! .. அந்த மண்மேடு ரத்த மழையில் கரை யப் போகிறது.'

'இனி தஞ்சைக்கு நானே மன்னன்.'

'புலிகிகர் வீரா! மராட்டிய சாம்ராஜ்யம் உதய மாகப்போகிறது. அகம்பாவம் பிடித்த நாயக்க வம் சம் அஸ்தமிக்கப் போகிறது'

'மராட்டிய வீரத்தை, தஞ்சை மறுமுறையும் ரசிக்க ஒரு வாய்ப்பு'

'அரசே!... தங்கள் ஆட்சிக் காலத்தில் .???' வெங்கண்ணு விஷயத்தை இழுத்து மழுப்புகிருன்.

'அந்தணர் வாழ்வார். ஆலயம் செழிக்கும். அக்ர காரம் வளரும் அஞ்சாதீர்.'

'சிவாஜியின் தம்பியல்லவா தாங்கள்!... மகா ராஷ்டிர மாவீரரே! வாழ்க! வாழ்க!... வாழ்க அந்த ணர், வானவரானினம்... வாழ்க!...'

இங்கே பேச்சு முடிகிறது .. தஞ்சையில் ஒரே அல்லோலம். வீதிக்கு வீதி வீரர் கூட்டம். குதிரைகளின் குளம்புகளில் குழந்தைகள் மிதிபட்டுச் சாகின்ற கோரக்காட்சி! மராட்டியப் படை கோட்டை வாயிலில் நுழையப் போகிறது. அகோர சப்தம் மாறி, அமைதி நிலவுகிறது. தன்னந் தனியாக நிற்கிறான் செங்கமல தாசன். எதிரிகள் கோட்டையில் புகுந்துவிட்டனர். கோட்டை வாயிலைக் காத்து 'நின்ற பீரங்கிகள் மௌன விரதமிருக்கின்றன... யுத்த பூகம்' உண்ணாவிரதமிருக்கிறதுபோலும். ஏன் என்று கேட்பாரில்லை. எதிரிப் படையின் எக்காளம் வெற்றித் தொனி கொட்டுகிறது. கோட்டை முகப்பில் பறந்த... நாயக்கர்கொடி .. எரிந்துகொண்டிருக்கிறது. அந்த எரியலைகளினூடே வெங்கண்ணுவின் இறுமாப்பான சிரிப்பும் முழங்குகிறது.

செங்கமலதாசனை மீண்டும் பார்க்கிறோம். எங்கே? அரண்மனையிலா? .. இல்லை. இருண்ட ஒரு காட்டுப்பாதையில் காண்கிறோம். அந்த அகாத இருட்டில் கோட்டை வாயிலின் கொடி கொழுந்து விட்டெரிவதை... அந்தக் கொழுந்துச் சிறுவன் தரிசிக்கிறான். 'கோ'வென அழுகிறான். அந்த அழுகையை மறைத்து அங்கே ஆயிரந் தலைகள் சிரிக்கின்றன. அனைத்தும் வெங்கண்ணுவின் தலைகள்!

சிரிப்பது மட்டுமா?... அவைகள் பேசுகின்றன.

'டே!... சிறுவா!... வெங்கண்ணு வம்சம் நினைத்தால் பட்டமும் கட்டும் – பலிபீடத்தையும் காட்டும்.'

மீண்டும் ஒரே கர்வச் சிரிப்பு! ...

பைத்தியக்காரனைப் போல செங்கமலதாசன் ஓடுகிறான். ஆம்!... தஞ்சையின் மன்னன் அப்படித்

தத்தளிக்கிறான்... குடிகாரனைப் போல் தள்ளாடுகிறான். முதலாளியின் முரட்டுச் சவுக்கால் தோல் கிழிய அடிக்கப்பட்ட ஏழைத் தொழிலாளியைப் போல் ஏங்குகிறான்.

ஒரு மரம் அவன் ஆட்டத்தைத் தடுத்து அமைதி வழங்குகிறது. முகமெல்லாம் ரத்தம் வழிய தஞ்சையின் தலைவன் பிணமாகத் தரையில் படுத்துக்கொள்கிறான். அந்தப் பசலைக்கு வெங்கண்ணு அமைத்துத் தந்த பலிபீடம் அதுதான்!...

வெங்கண்ணுவின் சிரிப்பு ஓய்கிறது. இருள் மறைகிறது...

'மராட்டிய சாம்ராஜ்யம் உதயம்' என்ற வார்த்தைகளை கட்டமாக அமைத்துக்கொண்டு, காலைக் கதிரவன் உதிக்கிறான். படத்தின் முடிவைக் குறிக்க திரையில் 'வணக்கம்' என்ற வார்த்தை குதிக்கிறது. அதற்கு மேலே ஒரு வட்டத்திலே வேதியர் வெங்கண்ணு, வெங்காஜிக்கு மாலை அணிவிக்கிறார்.

படம் முடிந்துவிட்டது. பாடம் கற்றுக்கொண்டீர்களா? பலிபீடம் நோக்க இப்பொழுது நீங்கள் எத்தனை பேர் தயார்?

பலிபீடம் நோக்குங்கள். பலிபீடத்திலே... சேரனின் மானம் துலைக்கப்பட்டுக் கிடப்பதை நோக்குங்கள். நாயக்கர் பரம்பரை நாசமாகிக் கிடப்பதை நோக்குங்கள். ராஜராஜ சோழனின் பொக்கிஷம் இறைந்து கிடப்பதை நோக்குங்கள். பலிவாஜுக்கு கம்பனின் டா மாலை சூட்டப்பட்டிருப்பதை நோக்குங்கள். காமராஜர்கள், கலியாணசுந்தரங்கள், நாமக்கல்லார்கள் அந்த பலிபீடம் நோக்கி கைகூப்புவதை

யும் நோக்குங்கள். அவர்களைத் தடுத்து நிறுத்துங்கள். ஆபத்து என்று அறிவிப்புவிடுங்கள். அதையும் மீறிச்சென்றால்... நீங்கள் பலிபீடம் நோக்கிப் பாயுங்கள்.

ஆரியபலிபீடத்திலே நீங்கள் சிந்தும் ரத்தம் அதன் அஸ்திவாரத்தை அசைத்ததால் பொங்கிய வியர்வைக் கடலாக இருக்கட்டும்.

அந்த பலிபீடத்திலே பெருக்கெடுத்தோடும் உங்கள் குருதி வெள்ளம், அதன் ஒரு மூலையைக் குத்தி உடைக்கும் போது பெருகியதாயிருக்கட்டும்.

உங்கள் தலை பலிபீடத்திலே உருளட்டும். ஆனால் கம்பன்ன் 'கண்மூடி'த் தலையைப் போல அல்ல! கனல் கக்கிடும் கண்களோடு அது வெட்டப் படட்டும்.

உங்கள் தசைகள் பலிபீடத்திலே கிழித்தெறியப்படட்டும். ஆனால் ஆஞ்சநேயனின் ரோஷமற்ற தசையைப் போல அல்ல! தன்மான ரத்தத்தின் சூடு தணியாமல் அவை கழிக்கப்படட்டும்.

நீங்கள் சாகப் பயப்படும் சமூதாயமா?... சமருக்கு...அஞ்சும் இனத்தவரா?...ரத்தக்கடல் உங்கள் மூதாதையரின் நீச்சல் குளம் வேலும் வாளும் அவர்கள் விளையாட்டுக் கருவிகள். போர்க்களம் அவர்கள் தவழும் தாழ்வாரம். பாசறை அவர்கள் படுத்திருந்த தொட்டில்!...அவ்வழி வந்தோரே! ஆளப்பிறந்தவரே!.. தமிழுக்காகதாளமுத்துவையும், நடராசனையும் தத்தம்செய்தவரே!

பலிபீடம் நோக்குங்கள்..பகுத்தறிவுச்சம்மட்டி, கையில் இருக்கட்டும்.

பூராண்ட இனத்தை ஆசைகாட்டி பலிபீடத் திற்கு இழுத்துச் சென்ற கைகாட்டிகள் அதோ!...

ஆலயங்கள், அக்ரகாரங்கள், அலங்கார மடங் கள், பாரத ராமாயணங்கள், பழைய பஞ்சாங்கங் கள், மோட்ச நரக சொர்க்கங்கள் அத்தனையும் பலி பீடத்தில் நிறுத்துங்கள். சுக்கல் சுக்கலாக உடைத் தெறியுங்கள்! துண்டம் துண்டமாக நொறுக்குங் கள். அணு அணுவாகக் கொளுத்துங்கள், முதலில் அந்த இந்துமதக் கொடுவாள் முறியட்டும்.

இந்துமதந்தான் உங்களை இன்று சேரியில் தள்ளியிருக்கிறது. இந்துமதந்தான் உங்கள் பெண் களை விதவைகளாக்கி வைத்திருக்கிறது. இந்துமதந் தான் உங்கள் இனத்தை மறைத்திருக்கிறது. இந்து மதந்தான் உங்களை மிருகங்களாக நடத்துகிறது.

இந்துமதந்தான்... ஆலயங்களை அமைத்தது, உங்கள் திரண்ட செல்வத்தைத் தின்று கொழுக் கிறது.

இந்துமதந்தான் மனுதர்மத்தின் பெயரால் உங்களை 'எதிர்த்துப் பேசாதே! எட்டி நில்!' என்று தடையுத்தரவு போட்டிருக்கிறது.

இந்துமதந்தான் ராமாயணத்தை உண்டாக்கி 'செருப்பாண்டாலும் சரி' என்ற அளவில் பிரிட் டிஷ் ஏகாதிபத்யத்தை நிலைக்கவிட்டிருக்கிறது.

இந்துமதந்தான் உங்களை சூத்திரர்களாக்கி... முதலாளிகளின் கையில் ஒப்புவித்து .....உதிரத்தை உறிஞ்சும்படி செய்திருக்கிறது.

அந்த மதக்கொடுவாள்... உங்கள் சம்மட்டி வீச்சால் பொடி பொடியாக சிதறி மண்ணுய்ப் போகட்டும், பலிபீடம் படார் .படார். எனத் தெரித்துத்'துகள் துகளா'கப் பறக்கட்டும் கண் காட்டி, காம மூட்டி...கழுத்தையறுப்பதற்கு,...வழி காட்டும் ஆரியக் கைகாட்டிகள் அக்கினிக்கு இரையாகட்டும்.

அழிந்தது போதும்...இனி ஆள்வோம், வீழ்ந்தது போதும்...இனி வாழ்வோம். எங்கே நடக்கட்டும் உங்கள் வேலை! பாடிக்கொண்டே உங்கள் படை கிளம்பட்டும்.

ஆரிய பலிபீடம்.....
அங்கே இந்துமதக்கொடுவாள்! வாள்
அழிக்கப் புறப்பட்டோம்.....
இதோ அவை தூள்! தூள்!